## இராமநாதபுரம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(19-10-2016 – 23-10-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 18-10-2016

**கடந்த கால வானிலை 14-10-2016 முதல் 17-10-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 1.1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25-27 |
| மேக மூட்டம் | 4-6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 64-78 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 3-6 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 23-10-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 19.10.16 | 20.10.16 | 21.10.16 | 22.10.16 | 23.10.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 1 | 1 | 0 | 10 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34 | 34 | 34 | 32 | 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 23 | 23 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 66 | 66 | 66 | 76 | 76 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 72 | 72 | 72 | 80 | 80 |
| காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | தெற்கு தென்கிழக்கு | தெற்கு தென்கிழக்கு | தெற்கு தென்கிழக்கு | தெற்கு தென்கிழக்கு | தெற்கு தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

➢ அக்டோபர் 19-ம் தேதி மற்றும் 22-ம் தேதி தவிர, எதிர்வரும் ஐந்து நாட்களில், இலேசான மழை சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் கரும்பு**

**பருவம்: பருத்தி: வளர்ச்சி பருவம்**

- முன்பருவ விதைப்பு செய்து முடிந்துள்ள வயல்களை பறவை மற்றும் அணில்களிடமிருந்து விதைகளை பாதுகாக்க வேண்டும். அதே போல் இறவை பயிர்களில் பயிர் எண்ணிக்கை பராமரிக்க விதை முளைக்காத இடங்களில் மறுபடியும் விதைப்பு செய்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். மேலும் தேவையான அளவுக்கு மிகையாக உள்ள செடிகளை களைந்து சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும்.
- பருத்தியில் இலைப்பேன் மற்றும் சாறு உண்ணும் பூச்சினைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 200SL 100மிலி/ஹெக்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- பருத்தியில் வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோய்கள் பாதிக்கப்பட்ட இடத்தில் மேற்பரப்பில் கார்பன்டஜிம் @1g/lit தெளிக்கவும் அதே போல் Triflosystrobin + Tebuconazole 0.75g/litre தண்ணிரில் கலந்து பாதிக்கப்பட்ட மற்றும் ஆரோக்கியமான செடியின் வேர்களைச் சுற்றிலும் நன்கு நனையும்படி தெளிக்கலாம்.
- வரும் நாட்களில் மழையுடன், அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால், கால்நடைகளுக்கு உலர்ந்த திடமான தீவனங்களை கொடுக்கலாம்.